


தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 04

மாணவர் பெயர் : .....

❖ 1,2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் காட்டப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

1. 

(1). 

(2). 

(3). 


2. 

(1). 

(2). 

(3). 

❖ 3, 4 ஆகிய வினாக்களில் காட்டப்பட்டுள்ள உருக்களில் ஒரு குறித்த இயல்புகளுக்கேற்ப இரு கூட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அக்கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

3. 

(1). AC உம் BC (2). BD உம் AC (3). AD உம் BC

4. 

(1). AB உம் CD (2). BC உம் AD (3). BD உம் AC

❖ 5, 6 ஆகிய வினாக்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

5. தென்னை - குரும்பை எனின், பனை - .....
(1). கன்று (2). மரம் (3). நுங்கு

6. ஆடு - மந்தை எனின், யானை - .....
(1). வரிசை (2). பந்தி (3). கூட்டம்

7. அம்மா நான் பரீட்சையில் சித்தியடைந்தமையைக் கண்டு உச்சிகுளிர்ந்தார், இதில் **உச்சி குளிர்தல்** என்பதன் கருத்து,
(1) வாழ்க்கையில் முன்னேறுதல் (2) மகிழ்ச்சியடைதல் (3) மிக மகிழ்தல்

www.lk

zoom Online வகுப்புக்கள்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

பாலர் வகுப்பு முதல் A/L வரை

“ தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் ”



PRIMARY

- தமிழ்
- நுண்ணறிவு
- கணிதம்
- பேச்சு சிங்களம்
- சுற்றாடல்
- பேச்சு ஆங்கிலம்





SECONDARY

- ICT
- MATHS
- ENGLISH
- TAMIL
- HISTORY
- SCIENCE

தனித்துவமான
புலமைப்பரிசில் பரீட்சை
வகுப்புக்கள் தரம் I தொடக்கம்
5 வரை நடைபெறுகின்றன


76667-4945

8. கெட்டிக்காரர்கள் எந்நிலையிலும் சாதிப்பார்கள். இக்கருத்தினை வெளிப்படுத்தும் பழமொழி.
(1) ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம். (2) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். (3) ஆழமறியாமல் காலை விடாதே.

9. "உயர்ந்தவர்கள் எந்நிலையிலும் தாழ்ந்து போகமாட்டார்கள்" இதனை உணர்த்தும் கருத்து.
(1) இரக்கப் போனாலும் சிறக்கப் போ. (2) உண்மை உயர்வு தரும். (3) புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.


❖ **10 - 11 வரையான வினாக்களுக்கு கோலத்தின் படி பெறுமானத்தைக் தெரிவு செய்க.**


10.




(1) 49
(2) 64
(3) 35

11.







(1) 30 (2) 24 (3) 28

❖ **பின்வரும் உருவினை அவதானித்து 12,13 ஆகிய வினாக்களுக்கு சரியான விடையினை தெரிவு செய்க.**

d	d	j	8
w	w	j	10
z	z	k	7
8	8	.....	

12. இடைவெளிக்குப் பொருத்தமான எண் யாது?
(1) 9 (2) 8 (3) 10

13. k என்னும் குறியீட்டினால் குறிக்கப்படும் எண் யாது?
(1) 4 (2) 5 (3) 7

❖ **பின்வரும் கவிதையை வாசித்து 14, 15 ஆகிய வினாக்களுக்கு விடையை தெரிவு செய்க.**

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா - பின்னர்ச்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா.

14. இக்கவிதையில் செம்பொற்குடம் போல தோன்றுவது,
(1) சூரியன் (2) நட்சத்திரம் (3) சந்திரன்

15. இக்கவிதையை இயற்றியவர்,
(1) பாரதியார் (2) தேசிய விநாயகம்பிள்ளை (3) சோமசுந்தரப்புலவர்

❖ **மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்து கோடிடுக.**

16. மங்குதல் - பிரகாசித்தல்,
(1) ஒத்தபதம் (2)எதிர்ச்சொல் (3) அடைமொழி

17. நம்பிக்கை - விசுவாசம்,
(1) எதிர்க்கருத்து (2) இணைமொழி (3) ஒத்த கருத்து

www.tamilkedu.lk

18. W.W.W என்பதன் விரிவாக்கம் யாது?
(1) மின்னஞ்சல் (2) இணையம் (3) வையக விரிவு வலை

19. வட்டம், முக்கோணம், சதுரம் ஆகிய நிறக்கொடிகள் முறையே 149 கொடிகள் கட்டப்பட்டுள்ளன எனின், இதில் எத்தனை முக்கோணக் கொடிகள் உள்ளன?
(1) 49 (2) 50 (3) 51

20. 30 நிமிடத்திற்கு 40km வேகத்தில் பயணம் செய்யும் மோட்டார் சைக்கிளொன்று, 400km பிரயாணம் செய்வதற்கு எடுக்கும் காலம் எவ்வளவு?
(1) 5 மணித்தியாலம் (2) 10 மணித்தியாலம் (3) 4 மணித்தியாலம்

21. 31 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தில் செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்கள் ஐந்து வீதம் உள்ளன. அம்மாதத்தின் 24 ஆம் திகதி என்ன கிழமையாகும்.
(1) புதன்கிழமை (2) வியாழக்கிழமை (3) வெள்ளிக்கிழமை

22. வாகனத்தரிப்பிடம் ஒன்றில் மோட்டார் சைக்கிள்களும் ஆட்டோக்களுமாக மொத்தம் 34 நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் சக்கரங்களின் எண்ணிக்கை 82 எனின், அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை யாது?
(1) 20 (2) 14 (3) 15

23. தனது மாதாந்தச் சம்பளத்தில் 1/2 பங்கை உணவிற்காக செலவு செய்து பின்னர் மீதியாகும் பணத்தில் 1/3 ஐ வங்கியில் சேமித்த பின், மீதிச்சம்பளம் 8000 ரூபாய் எனின், மாதாந்தச் சம்பளம் எவ்வளவு?
(1) ரூ.24,000 (2) ரூ.12,000 (3) ரூ.18,000

24. 90.00 ரூபாவிற்கு 12 மாம்பழங்கள் வாங்கலாம். 60.00 ரூபாவிற்கு வாங்கக் கூடிய மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?
(1) 9 பழங்கள் (2) 8 பழங்கள் (3) 10 பழங்கள்

25. 31 தொடக்கம் 35 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 3 எழுதப்படும் தடவைகள் யாது?
(1) 4 (2) 5 (3) 6

❖ **26,27 ஆகிய வினாக்களுக்கு மிகச் சரியான கருத்தைத் தரும் வாக்கியத்தைத் தெரிவு செய்க.**

26. (1) இது நாம் பிறந்த நாடாகும். இதனை நாம் பாதுகாக்க வேண்டும்.
(2) நாம் அதனைப் பாதுகாக்க வேண்டும். நாம் பிறந்த நாடு என்பதால்.
(3) இதனைப் பாதுகாக்க வேண்டும். இங்கு நாம் பிறந்ததால்.

27. நாம் எமது சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதற்குக் காரணம்,
(1) சூழலை அசுத்தமாக வைத்திருப்பதால் தண்டப் பணம் செலுத்த வேண்டும்.
(2) சூழலை சுத்தமாக வைத்திருக்கும் போது நாம் நோயின்றி வாழலாம்.
(3) சூழல் சுத்தமாக இருப்பின் நாம் அழகு பெறலாம்.

28. 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை எனின், இவ்வருடத்தின் 100 ஆவது நாள் என்ன கிழமையாகும்?
(1) செவ்வாய் (2) திங்கள் (3) புதன்

29. 6 மனிதர்களுக்கு வேலையொன்றைச் செய்து முடிக்க 4 நாட்கள் சென்றன. 8 மனிதர்களுக்கு அவ்வேலையை செய்து முடிக்கத் தேவையான நாட்களின் எண்ணிக்கை,
(1) 5 நாட்கள் (2) 3 நாட்கள் (3) 2 நாட்கள்


30. நாளை மறுதினத்திற்கு அடுத்த நாள் வியாழக்கிழமை எனின், இன்று என்ன கிழமை?
(1) திங்கள் (2) ஞாயிறு (3) செவ்வாய்

31. 250 கிராம் உருளைக்கிழங்கின் விலை ரூபா 25 ஆகும். 3 கிலோ 750 கிராம் உருளைக்கிழங்கின் விலை யாது?
(1) ரூ.375 (2) ரூ 325 (3) ரூ 475

32. சமதூர இடைவெளியில் நடப்பட்ட மூன்று கம்பங்களுக்கு இடையிலான தூரம் 24 m எனின், ஆறு கம்பங்களுக்கு இடையிலான தூரம் யாது?

(1) 48 m (2) 60 m (3) 56 m

❖ **பின்வரும் அடைப்பினுள் தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி 33, 34, 35 ஆகிய வினாக்களுக்கு விடையைத் தெரிவு செய்க.**



33.  இரண்டின் விலை யாது?

(1) 70 ரூபாய் (2) 80 ரூபாய் (3) 140 ரூபாய்

34.  ஐந்தும்,  இரண்டும் வாங்க தேவையான பணம் யாது?


(1) 520 ரூபாய் (2) 410 ரூபாய் (3) 370 ரூபாய்

35. குமார்  ஐந்து வாங்கி 500 ரூபாய் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

(1) 250 ரூபாய் (2) 300 ரூபாய் (3) 350 ரூபாய்

36. கண்ணனிடமும் கமலனிடமும் 125 ரூபாய் பணம் இருந்தது. கண்ணன் கமலனை விட 23 ரூபாய் அதிகமாக வைத்திருந்தான் எனின், கமலனிடம் உள்ள பணம் எவ்வளவு?

(1) 74 ரூபாய் (2) 51 ரூபாய் (3) 102 ரூபாய்

37. 

இவ்வுருவில் ஆறு பக்கங்களும் 1,2,3,4,5,6 எனக் குறிக்கப்பட்டுள்ள ஒரு தாயக்கட்டையின் மூன்று நிலைகள் உள்ளன. மேற்குறித்த தாயக்கட்டையின் 4 எனக் குறிக்கப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிரேயுள்ள பக்கத்தைக் காட்டும் எண் யாது?

(1) 1 (2) 2 (3) 6

38. 3m நீளமும் 2m உயரமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூசுவதற்கு 500ml வர்ணப்பூச்சு தேவை. 6m நீளமும் 3m உயரமும் கொண்ட சுவருக்கு வர்ணம் பூச எவ்வளவு ml வர்ணம் தேவைப்படும்?

(1) 1000ml (2) 1500ml (3) 1200ml

❖ வழங்கப்பட்ட தூரத்திற்கு அமைய 39,40 ஆம் வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவு செய்க.



அம்பாறையிலிருந்து கல்முனைக்கான தூரம் 32km ஆகும். திருகோணமலையிலிருந்து அம்பாறைக்கான தூரம் 250km ஆகும்.

39. திருகோணமலையிலிருந்து கல்முனைக்கான தூரம் கிலோமீற்றரில்,

(1) 218 (2) 228 (3) 208

40. அம்பாறையில் இருந்து மட்டக்களப்பிற்கான தூரம் 118 km எனின், மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்கான தூரம்,

(1) 142km (2) 132km (3) 128km



தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 04

மாணவர் பெயர் : .....

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.

ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் கல்வியிற் தங்கியுள்ளது. அத்தகைய பெருமையை ஈட்டிக் கொடுப்பதற்குக் காரணமாக அமையும் நூல்களை நாம் கண்களைப் போன்று பேணிக் காப்பது எமது கடமையாகும். எனவே நூல் நிலையங்களில் உள்ள நூல்களைக் கிழிக்காமலும் சிதைக்காமலும் பக்குவமாகப் பயன்படுத்துவோம்.

பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

i. ஒரு நாட்டின் பெருமை அந்நாட்டு மக்களின் எதில் தங்கியுள்ளது? .....

ii. "சிறுமை" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக? .....

iii. "நூல்கள்" என்பதன் ஒருமைச் சொல்லை எழுதுக? .....

iv. "கவனமாக" என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக? .....

v. தன்மை, பன்மை, எதிர்கால வினைச்சொல்லை எழுதுக? .....

vi. நூல்களை நாம் எவ்வாறு பேணிக் காக்க வேண்டும். ..... (6 x1 = 6 புள்ளிகள்)

2. பொருத்தமான இறந்த காலச் சொல்லை எழுதுக.

i. பரிசளிப்பு விழாவின் போது அதிபர் பிள்ளைகளுக்குப் பரிசுகளை .....

ii. மகள் தந்தைக்கு கடிதம் ஒன்றை ..... (2 x1 = 2 புள்ளிகள்)

3. சரியான விடையை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

i. ஆதிகால வேடர் ..... யில் மரவுரிதரித்தனர். (அறை, அரை)

ii. சுற்றுலாப் பயணி ஒருவர் கண்டிக்குச் செல்லும் ..... (வழி, வளி, வலி) எதுவெனக் கேட்டார். (2 x1 = 2 புள்ளிகள்)

4. இப்பழமொழிகளின் கருத்தை எழுதுக.

i. நிறைகுடம் தளும்பாது ..... ii. பொறுத்தார் பூமியாழ்வார் .....(2 x1 = 2 புள்ளிகள்)

5. தனிச்சொல்லை எழுதுக.

i. பத்து ஆண்டுகள் கொண்ட காலப்பிரிவு ..... ii. ஒன்று போல் இருக்கும் மற்றொன்று ..... (2 x1 = 2 புள்ளிகள்)

6. பிரித்து எழுதுக.

i. வானொலி - ..... ii. தேனமுது - ..... (2 x1 = 2 புள்ளிகள்)

7. பிழையாக எழுதப்பட்ட சொற்களைத் திருத்தி மீண்டும் வாக்கியத்தை சரியாக எழுதுக.

i. கடள் அளை கறையை நோக்கி வந்தது.

.....

ii. அதிகாளையில் சேவல்கள் கூவியது.

..... (2 x1 = 2 புள்ளி)

8. இவ்வாக்கியங்களை இறந்த காலத்திற்கு மாற்றுக.

i. பெண்கள் வயலில் வேலை செய்கின்றனர்.

.....

ii. நாய் கள்வனைத் துரத்துகின்றது.

..... (2 x1 = 2 புள்ளி)

www.lkedu.lk













Learn Easy Books

அனைத்து தரங்களுக்குமான பயிற்சி புத்தகங்கள்,
செயலட்டைகள், தவணை பரீட்சை மாதிரிகள் போன்றவற்றை
உங்கள் முகவரியில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்

+94 767573 559

FB Page - https://www.facebook.com/lebslk

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம் A/L வரையான
அனைத்து தரத்தினருக்கும் அனைத்துப் பாடங்களையும்

www.lkedu.lk

இணையத்தில்
இலவசமாக கற்றுக்கொள்ளலாம்

FB Page - https://www.facebook.com/learneasylk

FB Group - https://www.facebook.com/groups/lkedu

9. ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

i. வேண்டாம் / போக்கெல்லாம் / மனம் / போன / போக

.....

ii. இட்டு / காகம் / முட்டை / பொரித்தது / கூடுகட்டி / மரத்தில் /குஞ்சு

..... (2 x1 = 2 புள்ளிகள்)


10. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

i. உனக்கு கோபம் வராதா ii. ஒழுக்கம் விழுப்பம் தரும் என்பது வள்ளுவர் வாக்கு (2 x1 = 2 புள்ளிகள்)

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.

i. Library - ..... ii. Sunflower - ..... (2 x1 = 2 புள்ளிகள்)

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை, ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

i.  ..... ii.  ..... (2 x1 = 2 புள்ளிகள்)

13. கருத்தினை தமிழில் எழுதுக.

i. Bring me the register please ..... ii. Do you like? ..... (2 x2 = 4 புள்ளிகள்)

14. "செல்லம் மிதுல" எனும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

: ..... (1 x1 = 1 புள்ளி)

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

துள்ளிப் பாயுங்கள் : ..... (1 x1 = 1 புள்ளி)

தரப்பட்ட வெற்றிடங்களில் விடையினை எழுதுக.

16. "அறுபத்தொன்பதாயிரத்து முந்நூற்று எழுத்தைந்து" எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....

17. பத்தாயிரத்தினிடத்து இலக்கம் 4, ஆயிரத்தினிடத்து இலக்கம் 5, நூறினிடத்து இலக்கம் 1, பத்தினிடத்து இலக்கம் 3 , ஒன்றினிடத்து இலக்கம் 7 ஆகவுள்ள எண்ணை எழுதுக. .....

18. ஒரு தொழிற்சாலையில் மூன்று மாதங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பயிற்சிப் புத்தகங்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

மாதம்	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்
பயிற்சிப் புத்தகங்களின் எண்ணிக்கை	3587	4258	5196

i. முதல் இரண்டு மாதங்களில் உற்பத்தி செய்யப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கையைக் காண்க. .....

ii. ஜனவரி மாதத்தை விட மார்ச் மாதம் எத்தனை புத்தகங்கள் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளன? .....

19. கீழே உருவில் காட்டப்பட்டுள்ள பென்சிலின் நீளம் எவ்வளவு?



.....

20. ஒரு பாத யாத்திரையில் கலந்து கொண்ட 589 மாணவர்களுக்கு மூன்று பணிஸ் வீதம் வழங்க வேண்டியிருந்தது. தேவையான பணிஸ்களின் மொத்த எண்ணிக்கை யாது? .....

21. ஆசிரியை 527 பேனைகளை ஒரு பிள்ளைக்கு மூன்று பேனைகள் வீதம் பகிர்ந்தளித்தார்.

i. பேனைகளைப் பெற்றுக் கொண்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாது? .....

ii. மீதிப் பேனைகளின் எண்ணிக்கை யாது? .....

22. ஓர் ஒப்பந்தக்காரர் வீதிக்குத் தார் இடும் வேலையில் முதல் வாரத்தில் 24km 410m தூரமும் இரண்டாம் வாரத்தில் 18km 600m தூரமும் தார் இட்டார். அவர் இட்ட மொத்த தூரம் யாது? .....

23. அப்பா மு.ப 6.40 இற்கு வீட்டிலிருந்து புறப்பட்டு மு.ப 9.15 இற்கு அலுவலகத்தை அடைந்தார். அப்பா அலுவலகத்துக்குச் செல்வதற்குச் செலவிட்ட நேரத்தைக் காண்க? .....


24. அமாலி ஒரு குடையை வாங்குவதற்காக கடைக்குச் சென்றாள். குடையை வாங்குவதற்கு அவளுக்கு மேலும் 250 ரூபாய் தேவைப்பட்டது. குடையின் விலை 650 ரூபாய் ஆயின், அவள் கடைக்குச் செல்லும் போது எடுத்துச் சென்ற பணம் எவ்வளவு? .....

www.ikedu.lk

25. ஒரு பாத்திரத்தில் 4 லீற்றர் 500 மில்லிலீற்றர் மஞ்சள் நிறப் பூச்சு உள்ளது. குமார் மேலும் அதனுள் 3 லீற்றர் 200 மில்லிலீற்றர் வெள்ளை நிறப்பூச்சை இட்டான் எனின், இப்போது பாத்திரத்திலுள்ள நிறப்பூச்சின் மொத்த அளவு யாது? .....

26. A,B,C பாத்திரங்களை நீரால் முற்றாக நிரப்பி D யிற்கு ஊற்றினால் விரயமாகும் நீரின் அளவு யாது?

.....




27. 4 லறறற 480 மலலலலறறற நறப பூச்சினை 4 பாத்திரங்களில் சமமாக இடும்போது ஒரு பாத்திரத்தில் அடங்கும் நிறப்பூச்சின் அளவு யாது?

.....

28. ஆறு பிள்ளைகள் வீதம் இருக்கும் 18 குழுக்கள் உள்ளன. அதே பிள்ளைகளை நால்வர் கொண்ட குழுக்களாக்கினால் கிடைக்கும் குழுக்களின் எண்ணிக்கை யாது? .....

ஒரு குறித்த மாணவர் குழுவிடம் அவர்கள் விரும்பும் உணவு வகை பற்றிப் பெறப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன. இத் தரவைக்கொண்டு 29,30 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.



29. மிகக் குறைந்த எண்ணிக்கையாயிலான மாணவர்கள் விரும்பும் உணவு வகை யாது?

.....

30. குழுவில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.....

(15 x2 = 30 புள்ளிகள்)

இலக்கம் 31 தொடக்கம் 60 வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

31. சூரியனுக்கு அண்மையிலுள்ள கோள்,

1. வெள்ளி 2. புதன் 3. வியாழன்

32. பின்வருவனவற்றில் கிராமிய விளையாட்டு யாது?

1. கரப்பந்து 2. கரம் 3. சடுகுடு

33. தென்னை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?

1. லுணுவில 2. அகலவத்தை 3.தலவாக்கொல்ல

34. தொடர்பாடலுக்குப் பிரசித்தி பெற்ற இலத்திரனியல் ஊடகம்,

1. செய்திப்பத்திரிகை 2. துண்டுப்பிரசுரம் 3. இணையம்

35.  உருவில் உள்ள உடுக்கோலத்துக்கு வழங்கப்படும் பெயர் யாது?

1. இரட்டையர் 2. ஓராயன் 3. விருச்சிகம்

36. தலதா மாளிகை அமைந்துள்ள இடம்,

1. கொழும்பு 2. கண்டி 3.திருகோணமலை

37. உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடு,

1. இந்தியா 2. சீனா 3.வத்திக்கான்

38. ஆங்கிலேயர் இலங்கை முழுவதையும் ஆட்சிக்கு உட்படுத்திய ஆண்டு,

1. 1658 2.1948 3.1815

39. இலங்கை வேடரின் நடனம்,

1. கிரிகொரங்க 2. கதைக்கூத்து 3. கரகம்

40. தண்டுத்துண்டத்தை நட்டு புதிய தாவரம் பெறமுடியாதது,

1. மரவள்ளி 2. ரோசா 3. பலா

41. புகையிரதம் பயணத்தைத் தொடர்வதற்கு எந்நிறக் கொடி காட்டப்படும்?

1. பச்சை 2. சிவப்பு 3.மஞ்சள்

42.  இவ்வுரு உணர்த்தும் கருத்து,

1. வட்டமாகச் செல்லல் என்பதாகும். 2. மீள்சுழற்சிக்கு உட்படுத்தலாம் என்பதாகும்.
3. வலப்பக்கமாக திரும்ப வேண்டும் என்பதாகும்.

www.ikedu.lk

43. கண் சிகிச்சைக்குரிய சிறப்புமிக்க வைத்தியசாலை அமைந்துள்ள இடம்,

1. கண்டி 2. மட்டக்களப்பு 3. கொழும்பு

44. அணில் பாயும் போது உடற்சமனிலையை பேணும் உறுப்பு எது?

1. கால் 2. வால் 3. உடல்

45. நோயாளர்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களை வழங்கும் அரச நிறுவனம்,

1. சதொச 2. சலுசல 3.ஒசுசல

46. இலங்கையின் இறுதி மன்னன் யார்?

1. துட்டகைமுனு 2.ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் 3.பராக்கிரமபாகு

47. சோறு சமைப்பதற்குரிய அரிசியில் உள்ள கற்களைக் களைவதற்குப் பயன்படுத்தப்படும் பாத்திரம்,

1. மட்கோப்பை 2. மண்பானை 3. அரிக்கஞ்சட்டி

48. தேசிய கீதம் பாடும் போது இருகால்களையும் எவ்வாறு வைத்துக் கொள்ள வேண்டும்?

1. W வடிவில் 2. U வடிவில் 3. V வடிவில்

49. 

இவ்வுரு மூலம் காட்டப்படும் பூ

1. பொன்னாவரசு 2. கார்த்திகைப்பூ 3. பவளமல்லிகை

50. கலப்புணவு என்பது,

1. சகல போசணைப் பதார்த்தங்களும் அடங்கிய உணவு. 2. அரைத்துக் கலக்கப்பட்ட உணவு 3. தெரிவு செய்யப்பட்ட உணவு வகை.

51. சர்வதேச புத்தக தினம்,

1. மே 5 2. ஏப்ரல் 23 3. யூன் 5

52. இலங்கையில் அரச இலச்சினையில் மலரிதழ் குறிப்பது?

1. வீரம் 2. தூய்மை 3.தன்னிறைவு

53. 

அருகில் காட்டப்பட்டுள்ள படத்தில் உள்ள இசைக்கருவியின் பெயர் என்ன?

1. மகுடி 2. புல்லாங்குழல் 3. நாதஸ்வரம்

54. சர்வதேச தரச்சான்றிதழின் இலச்சினை,

1. ISO 2. SOS 3.SLS

55. மண்ணெண்ணெய்யினால் தீப்பிடித்த ஒருவரைக் காப்பாற்றுவதற்கு உடனடியாக எடுக்கப்பட வேண்டிய மிகப் பொருத்தமான நடவடிக்கை,

1. தீயை தண்ணீர் ஊற்றி அணைத்தல். 2. மணல் இட்டு தீயை அணைத்தல். 3. தீப்பிடித்த பகுதியை உடனடியாக அகற்றி விடுதல்.

56. 

மஞ்சள் நிறப்பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞை எதனைக் குறிக்கின்றது?

1. பாதுகாப்பான புகையிரதக் கடவை வீதிக்கு முன்னால் 2. புகையிரதம் செல்லத் தடை

3. பாதுகாப்பில்லாத புகையிரதக்கடவை வீதிக்கு முன்னால்.

57. 

படத்தில் காட்டப்பட்ட அலகுக்குரிய பறவை,

1. கிளி 2. காகம் 3. கழுகு

58. சோயா அவரையில் அதிக அளவில் உள்ள போசணைப் பொருள்,

1. புரதம் 2. கல்சியம் 3.கொழுப்பு

59. உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?

1. 11 2.7 3. 12

60. இலங்கையின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சி எது?

1. பம்பரகந்த 2. களனி கங்கை 3. குருந்து ஓய (30 x1 = 30 புள்ளிகள்)

61. உலகில் மிக ஆபத்தான நிலையில் பரவி வரும் ஒரு கொடிய நோயான கொரோனா நோயானது தற்போது எமது நாட்டிலும் ஏற்பட்டு பல விதங்களில் பாதிப்பினை எல்லோரிடத்தினும் ஏற்படுத்துகின்றது. நாம் இந்நோயிலிருந்து பாதுகாப்பு பெற அல்லது கட்டுப்படுத்த நீர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூன்றினை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

..... (3 x 2 = 6 புள்ளிகள்)

www.ikedu.lk